அனுப்புநர்
திரு.இரா.க.மாரியப்பன், பி.இ., எம்.பி.ஏ.,
உறுப்பினர் செயலர் (பொறுப்பு),
திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்,
சேவியர் காலனி, தெற்குபுறவழி சாலை,
திருநெல்வேலி - 627 005
e-mail:tveli.lpa@gmail.com
www.nellai.tn.nic.in/tlpa
தொலைபேசி எண் :0462-2350040

பெறுநர்
ஆணையர்,
திருநெல்வேலி மாநகராட்சி
திருநெல்வேலி

---

ந.க.எண்.864/2018 (1) திஉதிகு நாள். 26.06.2019

அய்யா,

**பொருள்:** மனைப்பிரிவு - திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் - திருநெல்வேலி மாநகராட்சி – தச்சை வார்டு -பழைய சர்வே சத்திரம் புதுக்குளம் கிராமம் - சர்வே எண்.1027/11 பாகம், 1027/12 பாகம், புதிய சர்வே வார்டு-A, பிளாக்-39, நகரளவை எண்.81/12B2 மற்றும் சத்திரம் புதுக்குளம் கிராமம் - சர்வே எண்.76/1 பாகம், 76/2 பாகம், புதிய சர்வே வார்டு -A, பிளாக்-39, நகரளவை எண்.74/1B, 74/2B அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ம.வ/திஉதிகு எண்.16/2011 மனை எண்.54 வடக்கு பாகம்-இல் 2419.00 சமீ பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

**பார்வை :**

1. மனுதாரர் திருமதி.S.ஐஸ்வர்யா அவர்களின் விண்ணப்பம் நாள்.10.04.2018 மற்றும் 26.06.2019
2. செயற்பொறியாளர் (தி) (பொ), உதவி செயற்பொறியாளர், திருநெல்வேலி மாநகராட்சி கடிதம் ந.க.எண்.ஜிபி1/2449/18, நாள்.07.06.2018
3. திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானம் எண்.9, நாள்.11.01.2019
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.14143/2018/எல்ஏ1 நாள்.13.12.2018.
5. ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி முகவரியிட்ட கடிதம் ந.க.எண்.864/19 திஉதிகு நாள்.19.02.2019
6. அரசாணை எண்.134, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை, நாள்.20.09.2002.
7. செயற்பொறியாளர் (திட்டம்) திருநெல்வேலி மாநகராட்சி கடிதம் ந.க.எண்.ஜிபி1/2449/18, நாள்.19.06.2019
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.14085/12 எல்ஏ1, நாள்.15.5.2013

---

பார்வை 1–ல் சுட்டியுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட இம்மனைப்பிரிவின் ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.

திருநெல்வேலி உள்ளூர் திட்டப்பகுதி, தச்சை வார்டு, பழைய சர்வே சத்திரம் புதுக்குளம் கிராமம் , சர்வே எண்.1027/11 பாகம், 1027/12 பாகம், புதிய சர்வே வார்டு-A, பிளாக்-39, நகரளவை எண்.81/12B2 மற்றும் சத்திரம் புதுக்குளம் கிராமம், சர்வே எண்.76/1 பாகம், 76/2 பாகம், புதிய சர்வே வார்டு -A, பிளாக்-39, நகரளவை எண்.74/1B, 74/2B அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ம.வ/திஉதிகு எண்.16/2011 மனை எண்.54 வடக்கு பாகம்-இல் 2419.00 சமீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப

S. Aishwarya

Scanned with CamScanner

ஒப்புதல் வழங்கிட ஏதுவாக பார்வை 5-ல் கண்டுள்ள கடிதத்துடன் அனுப்பப்பட்ட சாலை வரைபடத்திற்கேற்ப தார் சாலைகள் அமைக்கப்பட்டு பார்வை 7-ல் கண்டுள்ள கடிதம் மூலம் தானபத்திரம் பெறப்பட்டதைத் தொடர்ந்து நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ திஉதிகு எண்.27/2019 என எண்ணிடப்பட்டு வரைபட நகல்கள் இரண்டு மேல்நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை எண்.16-ன்படி சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தினை தானபத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு பார்வை 7-ல் கண்டுள்ள கடிதம் மூலம் விபரம் பெறப்பட்டுள்ளது. மனைப்பிரிவு நிபந்தனை 19(இ), 19 (உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மனைப்பிரிவிற்கு மாநகராட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது பார்வை 8-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மேற்காண் மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகளின் தரத்தினை மாநகராட்சி ஆணையர் அவர்களால் உறுதி செய்தும், மனைப்பிரிவு நிபந்தனை எண்.19 (ஈ)-ன்படி, அவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளளப்படுகிறது.

27-6-19

உறுப்பினர் செயலர் (பொறுப்பு),
திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்,
திருநெல்வேலி

27/6/19 27/6/19

<u>இணைப்பு:</u>
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு
நிபந்தனைகள் 2 தொகுப்புகள்

நகல்
1. வைப்பறை
(உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் நிபந்தனைகளுடன்)
2. திருமதி.S.ஐஸ்வர்யா,
D/o.S.சுரேஷ்பாபு,
22, வடக்குதெரு,
சிந்துபூந்துரை,
திருநெல்வேலி ஜங்ஷன் } உத்தரவு கடிதம் மட்டும்

S. Aishwariya

Scanned with CamScanner

87 21

# திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் நடவடிக்கைகள்
## நிகழ்வு : திருமதி.பெ.விஜயலெட்சுமி.பி.ஏ.,
## 1994ம் வருடத்திய திருநெல்வேலி மாநகராட்சி சட்டம் 250, 251-ன் கீழ் பிறப்பித்த அனுமதி

**ந.க.எண்: ஜிபி1/2449/2018** **நாள்: -08-2019**

பொருள்: மனைப்பிரிவு - திருநெல்வேலி மாநகராட்சி– தச்சநல்லூர் வார்டு –சத்திரம் புதுக்குளம் கிராமம் - சர்வே எண் 1027/11pt புதிய நகரளவை எண் 81/12B2 சர்வே எண் 76/1pt &76/2pt புதிய நகரளவை எண் 74/1pt பிளாட் எண் 54 வடக்கு பகுதி (I.P/T.L.P.A.No 16/2011) உள்ள 2419.53ச.மீ நிலத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி ஆணை வழங்குதல் - சார்பு

பார்வை:
1. மனுதார்..S.ஐஸ்வர்யா D/o திரு.S.சுரேஷ்பாபு என்பவரது விண்ணப்பம் நாள் 10.04.2018
2. திலி..உதிகு..உ.செ.அவர்களின் கடிதம் ந.க.எண் 864/2018 நாள் 12.04.18
3. திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர்(பொ) அவர்களின் உத்தரவு நாள் 01.06.2018
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள் 7.6.2018
5. திலி..உதிகு..உ.செ.அவர்களின் கடிதம் ந.க.எண் 864/2018திஉதிகு நாள் 19.02.19
6. தானப்பத்திரம் பதிவு எண் : 701/2019 நாள் 29-05-2019
7. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள் 04.6.2019 (திருநெல்வேலி வட்டாட்சியர் முகவரியிட்டது)
8. உறுப்பினர் செயலர் (பொ) திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 864-2018(2)-திஉதிகு நாள் 26.6.2019
9. ஆணையாளர் அவர்களின் உத்தரவு நான் 16.07.2019

---------

**உத்திரவு :**

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் வார்டு –சத்திரம் புதுக்குளம் கிராமம் - சர்வே எண் 1027/11pt புதிய நகரளவை எண் 81/12B2 சர்வே எண் 76/1pt &76/2pt புதிய நகரளவை எண் 74/1pt பிளாட் எண் 54 வடக்கு பகுதி (I.P/T.L.P.A.No 16/2011) உள்ள 2419.53ச.மீ நிலத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி பார்வை (1)ல் கண்டுள்ளபடி மனுதாரர் சமர்ப்பித்த மனைப்பிரிவு வரைபடத்துக்கு பார்வை (8)ல் கண்டுள்ள திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழு உறுப்பினர் செயலர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் ம.வ/திஉதிகு எண் 27/2019 என எண்ணிட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்திற்கு 1971-ம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 49-ன் கீழ் நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடங்களுக்கு தி.அ/ம.வ/தி.உ.தி.கு எண் 29/2019 என்று

S. Aishwarya

Scanned with CamScanner

எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இம்மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மாநகராட்சியால் அனுமதி வழங்கப்படுகின்றது.

**சிறப்பு நிபந்தனைகள்:**

நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம்,குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல" எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகின்றது.

**நிபந்தனைகள் :**

1. மனைப்பிரிவு நில உரிமை சம்மந்தமாக வருங்காலங்களில் ஏற்படும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு மனைப்பிரிவு உரிமையாளர் கட்டுப்பட வேண்டும்.

2. மாநகராட்சியின் முன் அனுமதியின்றி அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்துக்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், பொது ஒதுக்கீடு மனைகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டுச் செய்தல் கூடாது.
3. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் அளவுகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறு மூலை முடக்குடன் (Splay) அமைக்க வேண்டும்.
4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும் அல்லது கடை பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைச் சார்ந்த உபயோகத்திற்கல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக சர்வே ரிக்கார்டுகளில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.
5. தனித்தொரு குடியிருப்பு அனுமதிக்கப்பட்ட மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒருபக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒரு பக்கம் இணைந்த வீடுகள் கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக

S. Ishwarya

J.O

Scanned with CamScanner

வரைந்து மாநகராட்சியால் மனைப்பிரிவை அங்கீகரித்த எண்ணும் நாளும் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

17.மனைப்பிரிவு ஆய்வுக் கட்டணம் ரூ.8415/- செல்லான் எண்: 146/11-12/19-20/0003800 நாள்: 18.07.2019-ல் செலுத்தியுள்ளார்.

18.மின் விளக்கு கட்டணம் ரூ.1,50,000/-செல்லான் எண்: 146/11-12/19-20/0003800 நாள்: 18.07.2019-ல் செலுத்தியுள்ளார்.

19.மனைப்பிரிவின் பொது ஒதுக்கீடு இடங்களான சாலைகள் ஆகியவற்றை தானப்பத்திர பதிவு எண்: 701/19 நாள் 29-05-2019-ன்படி தானமாக மாநகராட்சிக்கு ஒப்படைத்துள்ளார்.

20. பாதாள சாக்கடைத் திட்ட பங்களிப்புத்தொகையாக ரூ14000/-ஐ செல்லான் எண்: 3801 நாள்: 18.07.2019ல் செலுத்தியுள்ளார்.

21. உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட சாலைப்பகுதிகளை திருநெல்வேலி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. நாள் 3.08.2019 (நகரளவை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது.)

21. இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகல் இணைக்கப்பட்டுள்ளது.

5.8.19

ஆணையாளருக்காக,
திருநெல்வேலி மாநகராட்சி

5/8/19

பெறுநர்:
திருமதி.S.ஐஸ்வர்யா,
D/o.S.சுரேஷ்பாபு,
22, வடக்கு தெரு,
சிந்துபூந்துறை,
திருநெல்வேலி ஜங்ஷன்

2.மனைப்பிரிவு நிபந்தனைகள்
மனைப்பிரிவு வரைபடம்

நகல்:

1. உதவி ஆணையாளர், தச்சநல்லூர் மண்டலம் ( உத்திரவு நகல் மட்டும்)
2. உதவி வருவாய் அலுவலர், தச்சநல்லூர் வார்டு அலுவலகம்( உத்திரவு நகல் வரைபடம் மட்டும்) காலிமனை வரிவிதிப்பு நடவடிக்கைக்கு
3. உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், தெற்கு புறவழிச்சாலை, சேவியர் காலனி, திருநெல்வேலி 5( உத்திரவு நகல் மட்டும்)
4. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், பாளை, திருநெல்வேலி – 2 (உத்திரவு நகல் மட்டும்)
5. சார்பதிவாளர் (பாளையங்கோட்டை) திருநெல்வேலி (உத்திரவு நகல் மட்டும்)
6. துணை இயக்குநர், உடன் தணிக்கைப் பிரிவு ( உத்திரவு நகல் மட்டும்)
7. சம்பந்தப்பட்ட வார்டு தச்சநல்லூர் உதவி மற்றும் இளநிலைப்பொறியாளர்/உதவிப்பெறியாளர் (தானப்பத்திரம் உத்தரவு நகல் மற்றும் மனைப்பிரிவு வரைபடம்)
8. நகரசார் அளவர், தச்சநல்லூர் ( உத்திரவு நகல் மற்றும் மனைப்பிரிவு வரைபடநகல்)

இருப்பு பதிவேடு (ஜிபி1) உத்திரவு நகல் மட்டும்)

S.Aiswarya

Scanned with CamScanner